நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



சீரால் உயர்ந்த நகரத்தார் திறனைக் காட்டும் குரலுக்குக்
காரைக் குடியில் கொப்புடையாள் கவினார் பாதம் காப்பாமே.

ஆகஸ்ட் 1982

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 1

ஒலி 7

துந்துபி

ஆடி

ஆகஸ்ட்

1982

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே — வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

— பட்டினத்தார்

கௌரவ ஆசிரியர்:

லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:

வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:

சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :

25, வடக்குச் சித்திரை வீதி,

மதுரை-625001.

தொலைபேசி ; p. p. 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

தனி இதழ் ரூ. 1-00
ஆண்டுச் சந்தா ரூ. 12-00

" நகரத்தார் குரல்" பத்திரிகையின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

S. முத்துக்கருப்பன் செட்டியார்

RM. முத்தழகப்ப செட்டியார்

S. முத்து ராஜா செட்டியார்

RM. நடராஜன் செட்டியார்

SK. AR. SM. இராமநாதன் செட்டியார்

S. N. S. சொக்கலிங்கம் செட்டியார்

S. அரசகேசரி செட்டியார்

SP. முத்துராமன் செட்டியார்

நகரத்தார் குரல்

சிந்தனைக்குரிய கருத்து

"பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளவர்களுக்குப் பள்ளிகளில், கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமே தவிர, சாதிப் பட்டியலில் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் என்று இடம் பெற்றுள்ளதைச் சுட்டிக் காட்டி இட ஒதுக்கீடு செய்வதும் சலுகைகள் கொடுப்பதும் சமூக அநீதியோடு எதிர்காலத்தில் கல்வியின் தரத்தையும் வளர்ச்சியையும் திட்டமிட்டுச் சீர்குலைக்கும் செயலாகும்" என முன்னாள் தமிழகக் கல்வி அமைச்சரும் பல கல்வி நிலையங்களின் நிறுவனருமான டி. எஸ். அவிநாசி லிங்கம் செட்டியார் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்திருப்பது சிந்தனைக்குரிய கருத்தாகும்.

ஒட்டு மொத்தமாகக் காப்பியடிக்கும் இந்நாளில் மாணவ, மாணவிகள் தேர்வில் பெறும் மதிப்பெண்களை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் கொடுப்பது முறையான செயல் அல்ல என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

மாணவ, மாணவிகள் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென எல்லாக் கல்லூரிகளுக்கும் அண்மையில் தமிழகக் கல்வித் துறை ஓர் சுற்றறிக்கை அனுப்பியிருப்பதைத் தொடர்ந்து அவர்கள் மேற்கண்டவாறு தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

சாதி அடிப்படையில் பின்தங்கியோரைவிடப் பொருளாதார அடிப்படையில் பின்தங்கியோரே கனிவுடன் கவனிக்கப் பட வேண்டியவர்கள். இக்கருத்துக்குத் தமிழக முதல்வரும் ஆதரவு தந்திருப்பது வரவேற்கத்தக்கது. பல துறைகளிலும் சீர்திருத்தங்களைச் செய்துவரும் தமிழக அரசு உண்மையில் பின்தங்கியோரை முன்னேற்றப் பாதையில் அழைத்துச்செல்ல உடனே முயற்சி எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

நஞ்சிலே தப்பவைத்த நாயகி

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.

நிலைபெறும் நகரத் தார்கள்
  நெஞ்சிலே கோயில் கொண்டாய்
கலைவளர் கம்ப னுக்குக்
  காரையில் இடங்கொ டுத்தாய்
குலமெலாம் காத்து நிற்கும்
  கொப்புடை யவளே! உந்தன்
மலரடி தலையின் மீது
  வைத்தருள் புரிவாய் அம்மா.

பஞ்செனும் அடியைத் தொட்ட
  பரமனை அந்த நாளில்
நஞ்சிலே தப்ப வைத்த
  நாயகி! வாழ்த்து கின்றோம்
நெஞ்சினுல் தவறு செய்யா
  நிலைமையை அருளி உந்தன்
அஞ்செழுத் தோத வைத்தே
  அருள்புரிந் தாள்வாய் அம்மா.

பெருந்தமிழ்க் கடலின் மூலம்
  பேச்சிலே அமுதம் தந்தாய்
அருந்தமிழ்த் தொண்டர் கம்பன்
  அடிப்பொடி திகழச் செய்தாய்
திருந்துசீர் அழகன் கல்வித்
  திறத்தினை ஈர்த்துக் கொண்டாய்
பொருந்திய கல்வி செல்வப்
  பொழிவினை அருள்வாய் அம்மா!

'தமிழ்க் கடல்' ராய. சொ. அவர்களுக்குப் பிறகு தமிழ் அர்ச்சனை இயக்கத்திற்கு ஆதரவாக ஒருவரும் இல்லை என்று கவலைப்பட்டேன். 'அதை நான் நிறைவேற்றுகிறேன்' என்று பல எதிர்ப்புகளுக்கிடையே நெஞ்சை நிமிர்த்தி துணிவோடு தமிழில் அர்ச்சனை செய்ய உத்தரவு பிறப்பித்தவர் நமது வ. நா. சிதம்பரம் செட்டியார் அவர்கள். அவர்கள் செய்தது பெருமைக்குரிய காரியம். அதற்காக அவர்களைப் பாராட்டு கிறேன்.


— பழ. கருப்பையா

(மதுரை நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

மதுரை நகரத்தார் சங்கத்தின் நிர்வாகக் குழுவினர்



மதுரை நகரத்தார் சங்கத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுப. அ. நடராஜன் செட்டியார் அவர்கள்.




துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்கள்.



பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எஸ். முத்துக்கருப்பன்செட்டியார் என்ற மணிச் செட்டியார் அவர்கள்.




செயலாளராக
மீண்டும்
தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள
சொ. சொ. மீ. சுந்தரம்
அவர்கள்



மற்றொரு செயலாளராகத்
தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள
இராம. ஏகப்பன் அவர்கள்

டாக்டர் பழ. லெட்சுமணன்

டாக்டர் பழ. லெட்சுமணன் அவர்கள் விராமதியைச் சேர்ந்தவர்கள். வயி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்களின் புதல்வர். M. Sc. (Ag) முதல் வகுப்பில் தேறியவர்கள். கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்து கொண்டே 'Nematode' எனப்படும் தாவர வேர்ப் புழுக்களைப்பற்றியும் அவை எப்படியெல்லாம் பரவித் தாவரங்களை அழிக்கின்றன என்பது பற்றியும் அதற்கு எதிர்ப்புத் திறனுடைய தாவர ரகம் பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு 'டாக்டர்' பட்டம் பெற்றிருக்கிறார்கள். அதற்காக ஒரு சிறப்புப் பரிசும் 4க்கு 3.88 மதிப்பெண்கள் பெற்றமைக்காக மற்றொரு சிறப்புப் பரிசும் பெற்றிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.



தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கே. காளிமுத்து அவர்களிடமிருந்து பழ. லெட்சுமணன் அவர்கள் டாக்டர் பட்டத்திற்கான சான்றிதழும் விருதும் பெறுகிறார்.

இதையொட்டி விராமதி நகரத்தார் பெருமக்கள் 15-5-82 அன்று டாக்டர் லெட்சுமணன் அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினார்கள்.

ஐந்தாண்டுக் காலம் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட டாக்டர் லெட்சுமணன் அவர்கள் தினமும் 18 மணி நேரம் ஒய்வின்றி கடும்

கசப்புக்கு இடம் தராது வேற்றுமையை எடுத்து விளக்குவது பண்பட்டவர் செயலாகும்.

உழைப்பைச் சிந்தியபோது அவர்களது அருமைத் துணேவியார் திருமதி உண்ணுமலே ஆச்சி அவர்கள் தம் கணவருக்கு எல்லா வகையாலும் உறுதுணேயாக இருந்தது போற்றுதற்குரியது.

அமைதி தவழும் முகம்; அடக்கமான குணம்; பண்பட்ட உள்ளம்; உயர்ந்த சிந்தனேகள்; கடும் உழைப்பு; எளிமையான தோற்றம் இவற்றின் மொத்த உருவகம்தான் டாக்டர் லெட்சுமணன் அவர்கள்.

அவர்களது அறிவையும் ஆற்றலேயும் ஆராய்ச்சித் திறனேயும் பாராட்டும் வகையில் கோவை வேளாண்மைப் பல்கலேக் கழகம் அவர்களுக்கு ஜுன் '82 முதல் 'Department of Nematology'யில் 'Associate Professor' பதவியை அளித்துக் கௌரவித்திருப்பது நமக்குப் பெருமை அளிப்பதாக இருக்கிறது.

— S. அண்ணுமலே, சிறுகூடல்பட்டி.

"கரும்பு தின்னக் கூலி ஏனே?"

கவிஞர் சிவல்புரி சிங்காரம்

கீழச்சிவல்பட்டி

பிறை நிலவை நெற்றியிலே வளேத்துப் போட்டு,
பேசுகிற விழியிரண்டில் மையைத் தீட்டி,
கருங்குழலில் நெய்தடவிக் காற்றில் விட்டு,
கனியிதழில் புன்னகையைக் காட்டும் சிட்டு,
திருமகள்போல் அழகாக யிருந்த போதும்
திருமணத்தைக் காணுமல் துடிப்ப தேனே?
'வருமானம்' குறைவாக வாங்கு தற்கு
மாப்பிள்ளே யாரேனும் வாய்ப்ப துண்டோ?

பூக்களிலே ஈயமர்ந்து தேனே யுண்ண
பொன்வண்டு பணமேதும் கேட்ப தில்லே!
தாக்கவரும் விலங்கினமும் ஒன்றை யொன்று
தழுவுதற்குச் செல்வத்தைக் கேட்ப தில்லே!
சேர்க்கையிலே சுகம்காண வைக்கு மந்தச்
சேயிழையை மணப்பதற்கு மனிதர் மட்டும்,
வாழ்க்கையிலே பணம் கேட்டு வாட லாமோ?
வாய்க்குருசிக் கரும்புண்ணக் கூலி யாமோ?

விலங்குகளாய் 'ஐந்தறிவை'ப் பெற்ற கூட்டம்
விளங்கியதோர் வாழ்க்கையினே அமைத்தும் கூட
நலம் காணும் 'ஆறறிவைப்' பெற்ற மக்கள்
நாள்தோறும் ஐந்தறிவால் வாழ லாமோ?
வழங்குகிற 'பணப் பொருத்தம்' விட்டு விட்டு
வாய்த்ததொரு 'மனப்பொருத்தம்' மட்டும் பார்த்தே,
கலங்குகிற பெண் இனத்தைக் கைப்பி டித்து
'கல்யாணம்' செய்வதற்கோர் சபதம் ஏற்போம்!

மருந்துத் தொழிலில் இனிக்கும் ஒருவர்

பெயருக் கேற்ற அழகு; வயதைச் சந்தேகிக்கும் இளமை; அத்துடன் ஆர்வம், துடிப்பு, உழைப்பு அனைத்தும் அமையப் பெற்றவர்கள் 'சான்டர்ஸன்' கே ஆர். சுந்தரம் அவர்கள். நெற்குப்பை தந்த நல் முத்துக்களில் இவர்களும் ஒருவர்.

கல்வியும் அனுபவமும்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியான இவர்கள் இலண்டன் இன்ஸ்ட்டிடியூட்டில் இரண்டரை ஆண்டுகள் கல்வி பயின்று நிர்வாகத் துறையின் விற்பனைப் பிரிவில் 'டிப்ளமா' பெற்றவர்கள். உலகப் பெரு நிறுவனமான 'அமெரிக்கன் ஹோம் புராடக்ட்ஸ் கார்ப்பரேஷ'னின் மருந்து தயாரிப்புத் துறையிலும்

பேட்டி: எல். சுந்தரம்

விற்பனைத் துறையிலுமாக 11 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள். அந்த அனுபவத்தைக் கொண்டு 1972ல் 'சான்டர்ஸன் பார்மசூட்டிக்கல்ஸ்' என்ற பெயரில் மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்கினார்கள். 11 தொழிலாளர்களுடன் தொடங்கப்பட்ட அந்த நிறுவனத்தில் இன்று 120பேர் பணியாற்றுகிறார்கள்; ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு ஊசி மருந்துகள், மாத்திரைகள், டானிக்குகள் போன்றவை தயாராகின்றன என்பது ஒரு சாதனையல்லவா!

பதவிகள்

சுந்தரம் அவர்கள் தென் தமிழ் நாடு மருந்து தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவராக, இந்திய மருந்து தயாரிப்பாளர்கள் சங்கத்தின் உறுப்பினராக, மதுரை தெற்குப் பகுதி சுழற் குழுவின் தேர்வு செய்யப்பட்ட தலைவராக, தல்லாகுளம் ஒய். எம். சி. ஏ. யின் தலைவராக, மதுரை உற்பத்தித் திறன் குழுவின் பொருளாளராக மற்றும் பல்வேறு அமைப்புக்களில் பல்வேறு பதவிகளில் இருந்து சமூகத் தொண்டுகள் செய்து வருகிறார்கள்.

மத்திய அரசின் விருது

சிறந்த சிறு தொழில் அதிபர் (*Self Made Industrialist*) என்ப



தற்காக இந்தியப் பொருளாதாரத் தொழில் கழகத்தின் சிபாரிசின் பேரில் மத்திய அரசு வழங்கிய 'உத்யோகப் பத்ரா' என்ற விருதை 1980ல் உதவிக் குடியரசுத் தலைவர் இதயத்துல்லா அவர்களிடமிருந்து இவர்கள் பெற்றது நமக்கெல்லாம் பெருமை அளிப்பதாக இருக்கிறது.

தொழில் அனுபவம்

''மருந்து தயாரிக்கும் தொழிலில் நீங்கள் கண்ட அனுபவம்

பெரிய இலட்சியத்துக்காக வாழ்வை ஒப்படைக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

என்ன? இந்த நிறுவனத்தை மதுரையில் நிறுவக் காரணம் என்ன?'' என்று கேட்டபோது—

''1947ல் மருந்துகளுக்கு நாம் முழுக்க முழுக்க வெளிநாட்டையே நம்பி இருந்தோம். பெரும் பகுதி மருந்துத் தொழிற்சாலைகள் வெளிநாட்டினராலேயே நடத்தப்பட்டன. 1950ல் இந்திய நிறுவனங்கள் பல தொடங்கப்பட்டன. தொடக்கத்தில் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் மதிப்புக்கு தயாரிக்கப்பட்ட மருந்துகள் இப்போது ஆண்டுக்கு 2000 கோடி ரூபாய் மதிப்புக்குத் தயாராகி வருவது குறிப்பிடத்தக்கதாகும். மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாக வங்காள முதல்வர் திரு பி. சி. ராய், திரு. விக்ரம் சாராபாய் போன்றவர்கள் கூறினர்கள். அந்த ஆர்வத்தில் நான் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொண்டு இந்த நிறுவனத்தைத் தொடங்கினேன். எங்கள் தொழிற்சாலையில் தயாராகும் மருந்துகளை நாங்கள் 8 மாநிலங்களுக்கு அனுப்புகிறோம், மலேஷியா, இலங்கை முதலிய வெளிநாடுகளுக்குச் சிறிய அளவில் அனுப்புகிறோம்.''

''மதுரை ஒரு அழகான நல்ல நகரம். இந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதற்காகவே இதை மதுரையில் தொடங்கினேன்'' என்று பதிலளித்தார்கள்.

வெளிநாடு

சுந்தரம் அவர்கள் 1981ல் கீழ் திசை நாடுகளான மலேஷியா, சிங்கப்பூர், ஹாங்காங் முதலிய நாடுகளில் தொழில் நிமித்தமாக சுற்றுப் பயணம் சென்றுவந்திருக்கிறார்கள்.

மற்றுமொரு தொழிற்சாலை

மருந்து, மாத்திரைகள் தயாரிப்பதற்கு வேண்டிய அடிப்படை மருந்து, மூலப் பொருள்களைத் தயாரிக்க ஒருகோடி ரூபாய்த் திட்டத்தில் மானாமதுரை 'சிப்காட்' தொழிற்பேட்டையில் இவர்கள் ஒரு தொழிற்சாலையை நிறுவி வருகிறார்கள்.

சிறு தொழில் தொடங்குகிறவர்களுக்கு அரசின் ஆதரவு இன்னும் வேண்டுமென்றும் போதுமான அளவு ஊக்கம் அளிக்கப்படவில்லை என்றும் இவர்கள் கூறுகிறார்கள்.

இலவச மருத்துவ முகாம்

தோப்பூர் சிவானந்த ஆசிரமத்தில் 4, 5 வாரங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இலவச மருத்துவ முகாம்களில் இவர்கள் 5, 6 முறை பங்கேற்று, பொதுமக்களுக்கு இலவசமாக மருந்து, மாத்திரைகளை வழங்கியிருக்கிறார்கள்.

இந்திய மூலிகைகளிலிருந்து '*Extract*' எடுத்து இவர்களது நிறுவனம் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறது. அது தொடர்பாக ரஷ்யாவிலிருந்து மருந்துத் துறை ஆராய்ச்சியாளர்கள் 5 பேர் வருகிற ஆகஸ்ட் மாதம் மதுரை வருகிறார்கள்.

தென்னாட்டில் கண் நோய்களுக்கு வேண்டிய மருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனங்களில் 'சான்டர்ஸன்' முதன்மையானது.

கே ஆர். சுந்தரம் அவர்கள் நல்ல பல சிறப்புக்களைப் பெறவும் மக்களுக்குச் சிறந்த சேவை புரியவும் மனமார வாழ்த்துவோம்.

❈ *கல் போன்று அமைதியுற்றிருப்பது அமைதியாகாது. நேர்மையினின்று வடிவெடுக்கின்ற அமைதியே உண்மையான அமைதியாகும்.*



கர்நாடக மாநில நகரத்தார் சங்கத்தின் சார்பில் பெங்களூரில் 20-6-82 அன்று நடைபெற்ற பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் தலைமையுரையாற்றுகிறார். அருகே (இடமிருந்து வலமாக) திரு. சுப.இராமன், திரு பழ. கருப்பையா திரு. தண். கி. வேங்கடாசலம், திரு. எம். எஎல். முத்தையா (சங்கத் தலைவர்) ஆகியோர்.



பெங்களூரில் நடைபெற்ற பண்டிதமணி நூற்றாண்டு விழாவிற்கு வருகை தந்த நகரத்தார் பெருமக்களின் ஒரு பகுதி.

விஞைப் பூக்கள்

பேராசிரியர் கண. சிற்சபேசன் எம். ஏ.

திரை கடலுக்கப்பாலுள்ள நம்மவரின் திருப்பாதங்களுக்கு என் விஞைப் பூக்களை அருச்சிக்கின்றேன்.

தாய் நாட்டில் - செட்டிநாட்டுத் தாய் மண்ணில் நம்மவர்கள் கூடுகின்ற இடங்களில் .....

ஏதோ அங்கே உங்கள் பாதுகாப்பில் கோடிகோடியாகக் குவிந்து கிடப்பதாகக் கூறுகிறுர்களே, அது உண்மையா?

வரி கட்ட முடியாமல் வீட்டு மேங்கோப்புகள் இங்கே நல்லவிலைக்கு விற்கப்படுகின்றன. இது உண்மை!

அங்குள்ள செல்வங்களைக் கட்டிக் காக்கும் நம்மவரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைகிறதாமே, அது உண்மையா?

இங்கு கட்டிக்காக்க முடியாத அளவு நமது கன்னியர் செல்வங்கள் நாளுக்கு நாள் பெருகுகின்றன. இது உண்மை!

அங்குள்ள அரசாங்கத்தின் கொள்கைகள் இன்னும் கொஞ்ச காலத்தில் நமக்குச் சாதகமாக இருக்காதாமே, அது பொய்தானே?

இங்குள்ள அரசாங்கத்தின் கவனம் நம் மீது இப்போது கனிவாக விழுந்திருக்கிறது. இது உண்மை!

அங்கிருக்கும் செல்வத்தைத் திரட்டி வந்தால் இங்குள்ள நம்மவரின் கொதிக்கும் வயிறும், கன்னியரின் குளமாகும் கண்ணீரும் ஒன்று நிறைந்தும் ஒன்று வற்றியும் போகுமாமே, அதுவும் பொய்தானே?

அங்கிருந்து உங்கள் கருணைக் கரங்கள் நீளும் காலம் வரை இங்கே வயிறுகள் வெம்பியும் கண்கள் நீர் உகுக்கவும் காத்திருக்கின்றன. இது உண்மை!

அருச்சனையை முடிக்கும் தருணம் ஒரேயொரு ரகசியமான சந்தேக மந்திரம்.

உங்களுக்கு இங்குள்ள யார்மீதும் நம்பிக்கையில்லையாமே! இதுகூடவா உண்மை?

நீங்கள் வந்து நிதி நிறுவினுல் கரம் நீட்டி அழைத்துக் கொள்ள நேசக் கரங்கள் நீண்டவண்ண மிருக்கின்றன. இது மட்டும் உண்மை!

அங்கு கொண்டு செல்வதைவிட இங்கேயே போனுலும் பெருஞ் செல்வம் போகட்டும் என்று உங்களில் சிலரது உள்மனம் ஒலிப்பதாக இங்கே சிலர் நினைக்கிறுர்களே, இது கண்டிப்பாகப் பொய் தானே?

அது உண்மையாகப் போய்விடுமோ, என்று தினமும் மயங்கும் உள்ளங்கள், உண்மையாகிவிடக் கூடாதே எனத் துடிதுடிக்கும் கன்னியரின் கண்ணீர், உண்மையாகக் கூடாது என்ற காளையரின் தவிப்பு. உண்மையாக இருக்காது என்ற முதியோரின் நம்பிக்கை இவையெல்லாம் கரை கடந்த வெள்ளமாகும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை. இது மட்டும் சத்தியம்.

காலம் மறக்க முடியாத காசிவிசுவநாதன் செட்டியார்

''புத்தகம் வாங்கித் தந்தால் தான் சாப்பிடுவேன்'' என்று தம் 7ஆவது வயதில் அடம் பிடித்து (இப்படியும் ஒரு அடமா?) வெற்றி கண்ட ஒரு பெரியவர், இன்று நம்மிடையே இருக்கிறார்கள். அவர்கள்தான் பாகனேரி 'தமிழ்ப் புரவலர்' வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள். 'வித்துவான் காசிச் செட்டியார்' என்றுதான் பலரும் அவர்களை அழைக்கிறார்கள். கதராடை அணிந்ததால் 'கதர்க்காசி' என்றோர் பெயரும் இவர்களுக்குண்டு.

பேட்டி :
எல். சுந்தரம்

84 வயதுப் பெரியவரான அவர்கள் ஐந்து தலைமுறையைக் கண்டவர்கள். புத்தகங்களைச் சேகரிப்பது, படிப்பது என்றால் அவர்களுக்குப் பேரானந்தம். 1913ல் புத்தகங்கள் வாங்கித் தொகுக்கத் தொடங்கிய அந்த நல்ல பழக்கம், இன்னும் அவர்களை விட்டு அகலவில்லை.

அவர்கள் முதன்முதலில் வாங்கிய புத்தகங்கள் என்னென்ன தெரியுமா?

திருவிளையாடற் புராணம், வில்லிபாரதம், கம்பராமாயணம், மூவர் தேவாரம், திருவாசகம் போன்றவை.

நூல் நிலையம்

புத்தகங்களிலேயே புரண்டு எழுந்த அவர்கள், தம் சொந்த ஊரான பாகனேரியில் 1920ஆம் ஆண்டில் 'கருணை கடாட்சி வாசக சாலை' ஒன்றை ஏற்படுத்தியதோடு 1500 தமிழ்ப் புத்தகங்களை அந் நூல் நிலையத்திற்கு மனமுவந்து இலவசமாக வழங்கினார்கள். இந் நூல் நிலையம் 1934ல் திருவள்ளுவர் நூல் நிலையமாக மாறிற்று.



இந்த நூல் நிலையத்திற்கும் தமிழ், ஆங்கிலம், வடமொழி நூல்கள் 3500ஐ அன்பளிப்பாக வழங்கினார்கள். அதுவும் இப்போது மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ் நூல் நிலையமாக இயங்கி வருகிறது.

இறைப் பணியில் தன்னை மறந்திருப்பவன் பாக்கியவான்.

மரபுத் தொண்டு

1924 ஆம் ஆண்டு காரைக்குடி தன வைசிய ஊழியர் சங்கத்தில் சேர்ந்து திரு. சொ. முருகப்ப செட்டியார், திரு. ராம. சொக்க லிங்கம் செட்டியார், திரு. பிச்சப் பா சுப்பிரமணியம், திரு. வி. சா. காசிவிசுவநாதன் செட்டியார், கல்லுப்பட்டி திரு. மெ. சாமிநா தன் செட்டியார், திரு. வை. சு. சண்முகம் செட்டியார் முதலிய நண்பர்களோடு இணைந்து சமூகத் தொண்டு பல செய்துள்ளார்கள்.

சமயத் தொண்டு

காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தின் உறுப்பினராகச் சேர்ந்து சமயத் தொண்டுகள் பல புரிந்துள்ளார்கள். இச் சங்கத்தின் சார்பில் மாணிக்கவாசகர் போன்ற சமயக்குரவர் வரலாறு களைச் சிறுசிறு புத்தகமாக வெளி யிடப் பண உதவி செய்திருக்கி றார்கள்.

1934ல் 'தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்' ஒன்றைப் பாக னேரியில் ஏற்படுத்தி அதன் ஆண்டு விழாக்களில் மறைமலை அடிகளார், பண்டிதமணி மு. கதி ரேசன் செட்டியார், இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், பண்டித நாவலர் ந. மு. வேங்கட சாமிநாட்டார், கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தி ஆகிய பெரிய பெரிய அறி ஞர்களை யெல்லாம் அழைத்து அதில் கலந்து கொள்ளும்படி செய்திருக்கிறார்கள்.

காந்தியடிகள்

1921ல் முதன் முறையாகக் காரைக்குடிக்கு வருகை தந்த மகாத்மா காந்தியடிகளைச் சந் தித்து காந்தியடிகளுக்குக் கொடுக் கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டு அருந் தொண்டாற்றி யிருக்கிறார்கள். அதுமுதல் கதரா டை அணிந்து வரலானார்கள்.

1926ல் மீண்டும் காந்தியடிகள் காரைக்குடிக்கு வருகை தந்த போது திரு. மு. நா. மு. சொக்க லிங்கம் செட்டியார் திரு. ராம. அ. அ. சிவ. சிவராமன் செட்டி யார் திரு. கண. மு. மு. சாத. சாத்தப்ப செட்டியார் ஆகிய நண் பர்களின் உதவியோடு காந்தியடி களைப் பாகனேரிக்கு அழைத்து வந்து, பொதுக்கூட்டத்தில் அறி வுரை வழங்க ஏற்பாடு செய்தார் கள். காந்தியடிகளின் அரிசன நிதிக்குப் பொதுமக்களிடமிருந்து பணம் திரட்டிக் கொடுத்ததோடு தாமும் வழங்கிப் பண முடிப்பு ஒன்றும் அளித்துள்ளார்கள்.

பம்பாயில் நிகழ்ந்த அகில இந் தியக் காங்கிரசுப் பேரவைக்குத் தமிழ் நாட்டின் பிரதிநிதிகளாகச் சென்ற திரு. ஆர். வி. சுவாமிநா தன், திரு. சி. உ. சுப. உடையப் பா, திரு. கண. மு. மு. சாத. சாத்தப்ப செட்டியார் ஆகிய மூவ ரோடு இவர்களும் சென்று அருந் தொண்டாற்றியிருக்கிறார்கள்.

இந்தி எதிர்ப்பு

1937ல் இந்தி எதிப்பு இயக்கம் தொடங்கியபோது மறைமலை அடிகளார் அவர்களைக் கொண்டு 'இந்தி பொது மொழியா?' என்ற தலைப்பில் நூல் ஒன்றினை எழுதச் செய்து, இலங்கை சிவானந்த அடிகளாரைக் கொண்டு அச்சிடச் செய்து பொதுமக்களுக்கு அப்புத் தகத்தை இலவசமாக வழங்கினார் கள்.

> காந்திஜி, நேருஜி, ராஜாஜி ஆகியவர்களை எல்லாம் இப்போது மறந்து விட்டார்கள். இப்போது நினைவெல்லாம் எல். கே. ஜி, யு. கே. ஜி. பற்றித்தான் இருக்கிறது.
>
> — டாக்டர் சரஸ்வதி இராமநாதன்
>
> (பாகனேரியில் நடைபெற்ற ஒரு மணி விழா பட்டி மண்டபத்தில்)

1938ல் இந்தி எதிர்ப்பின் போது பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பல புத்தகங்களை அச்சிட்டு இலவசமாக விநியோகம் செய்தார்கள்.

வரவேற்புக் குழுத் தலைவர்

1938ல் காரைக்குடியில் நிகழ்ந்த இராமநாதபுரம் மாவட்ட இரண்டாவது தமிழர் மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள்.

பொதுப் பணிகள்

கொப்பனுபட்டி 'கலைமகள் கல்லூரி'யின் ஆட்சிக் குழு உறுப்பினராக இருந்திருக்கிறார்கள்.

1952 முதல் மூன்றரை ஆண்டுகள் பாகனேரி கூட்டுறவுப் பண்டக சாலை ஆட்சிக் குழுவின் தலைவராக இருந்து தொண்டாற்றியிருக்கிறார்கள்.

1943ல் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களுக்கு 'மகா மகோ பாத்தியாய' பட்டம் கிடைத்ததைப் பாராட்டும் வகையில் நடத்தப்பட்ட விழாவிற்கு இவர்களது முயற்சி காரணமாகும்.

புத்தக வெளியீட்டாளர்

காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் தம் தாயார் வள்ளியம்மை ஆச்சியின் நினைவாக சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் மூலம் பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

பண்டித நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்கள் எழுதிய உரையோடு கூடிய சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு போன்றவையும் இளவழகனார் அவர்கள் எழுதிய விளக்க உரையோடு கூடிய கலித்தொகை, நச்சினார்க்கினியம், திருவாசகம், தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், திருமுக விலாசம், செயங்கொண்டார் சதகம், நாலடியார் பொழிப்புரை ஆகியவை இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இவர்களது மணி விழா 11—10—1958ல் பாகனேரியில் தமிழ்ப் பெரும் புலவர் ராய. சொக்கலிங்கனார் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

அன்புப் பெயர்

''வித்துவான் காசிச் செட்டியார்'' என்று உங்களை அழைக்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன?'' என்று அவர்களிடம் கேட்டபோது—

''நான் வித்துவானுக்குப் படிக்கவுமில்லை; எனக்கு அப்படி ஒரு பட்டத்தை யாரும் கொடுக்கவுமில்லை. நான் முன்பு கம்பராமாயணத்தைப் பற்றி விளக்கவுரை செய்ததால் ஆச்சிமார்கள் என்னை அப்படி அழைக்கிறார்கள்'' என்று பதிலளித்தார்கள்.

கதராடை

''கதர்க்காசி' என்று ஒரு பெயர் தங்களுக்கு இருக்க தாங்கள் இப்போது கதர் உடுத்துவதில்லையே, அது ஏன்?''

''நான் 30 ஆண்டுகள் கதராடை தான் அணிந்து வந்தேன். 'நூல் நூற்றுக் கொடுத்தால் தான் கதராடை அணியலாம்' என்று காங்கிரஸில் ஒரு விதி இருந்தது. என்னால் நூல் நூற்றுக் கொடுக்க முடியாமல் அதற்குப் பின் கதராடை உடுத்துவதை விட்டுவிட்டேன்.''

காசி விசுவநாதன் செட்டியார் அவர்கள் ஏட்டுக் கல்வியுடன் தம் படிப்பை நிறுத்திக்கொண்டு விட்டாலும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதைப் பிறருக்குப் போதிக்கிறார்கள். புத்தகங்கள் தொகுப்பதை மட்டும் மேற்கொள்ளாது அவ்வப்போது தேவையைக் கருதி அவற்றைப் பிறர் பயனடைய இலவசமாகவும் வழங்கி வருகிறார்கள். அவர்கள் பல்லாண்டுகள் வாழவும் அவர்களது தொண்டு தொடரவும் உளமார வாழ்த்துவோம்.

✤✤✤✤

பாவடியும் காவடியும்

சுப. அ. நடராஜன் செட்டியார்
(தலைவர், நகரத்தார் சங்கம், மதுரை)

ஆண்டவனை அடையப் பல வழிகள் உண்டு. அவற்றுள் எளிதான வழி அவன் புகழைப் பாடுவதே. உருகிப் பாடினால் ஓடி வருபவன் முருகன் என்னும் முத்தமிழ்க் கடவுள். தன்னை வாழ்த்து வாரை மட்டு மின்றி, முத்தமிழால் வைதாலும் வாழ வைப்பவன் முருகன்.

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப் போன்

என்று பாடுகிறார் அருணகிரி நாதர். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படை கேட்டு அருள்புரிந்ததும் ஔவையிடம் சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டுத் திருவிளையாடல் நிகழ்த் தியதும், மதுரைச் சங்கத்தில் தானுமொரு புலவனாக வீற்றிருந்ததும் தமிழ் விரும்பும் தண்டயுதபாணியின் அருளாடல்கள் அன்றோ?

பாவடியில் குடியிருக்கும் பழனியாண்டவனுக்குக் காவடியின் கீழிருந்து காட்சியளிப்பதும் பிடித்தமானது. பக்தர்கள் சுமந்துவரும் காவடியில் மயில் தோகையில் குலுங்கி ஆடி மகிழும் அழகன் முருகன்.


இப்படிப் பாவடியிலும் காவடியிலும் குடியிருக்கும் முருகன் இயல்பை நன்றாக உணர்ந்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள். எனவே காவடி கட்டிக் குன்றக்குடிக்கும் பழனிக்கும் ஆண்டுதோறும் சென்று வழிபடுகிறார்கள். பர்மா, மலேயா, இலங்கை, முதலிய பிற நாடுகளுக்கும் காவடி எடுக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். காவடி எடுத்துப் போகும் போது முருகன் புகழைப் பாடக் காவடிப் பாட்டுக்கள் எழுதினார்கள். இந்தப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டும் காவடி எடுத்து ஆடிக் கொண்டும் வருகின்ற நகரத்தார்கள்பால் பேரன்பு கொண்ட முருகன் தானும் செட்டியாகி ''கடல் சூர்தடிந்த செட்டியப்பனை'' என்று தேவாரம் பாடக்கூடிய அளவிற்குச் செட்டி யாராகி விட்டான். ''செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை'' என்று கூறும் அளவிற்குத் தன்னுடைய மெய்யன்பர்களாகிய நகரத்தார் களுக்குக் காட்சி கொடுத்துக் கருணை செய்தான்.

இப்படிப் பாவடியாலும் காவடியாலும் முருகனை வழிபட்ட நகரத் தார்கள் இந்தப் பழக்கத்தை விடாமல் தொடர்ந்து கடைப் பிடிக்க வேண்டும். முருகன் அருள் பகையை விரட்டிப் பாதுகாக்கும்.

வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளிவருகுது வேல்

என்ற பாரதி பாடல் நமக்கு வழிகாட்டட்டும்.

துறவின் தூய்மை



சொல்லரிய ஒளிவீசும் கருணைக் கண்கள்;
துறவுக்கும் தூய்மையினை அளிக்கும் தோற்றம்;
வெல்லரிய புலனைந்தும் வென்ற நெஞ்சம்;
வேதாந்தப் பொருளெல்லாம் விரிக்கும் சொற்கள்;
நெல்லையெனும் தாய்மடியில் திகழும் பிள்ளை:
நினைவாலே ஆலயத்தை நிறுத்தும் பார்வை;
செல்வழிக்குக் கதியாகும் இராமனாத
தேசிகரின் தோற்றமது சிவத்தின் தோற்றம்.

— சொ. சொ. மீ. சுந்தரம்

கோவிலூர் மடாலயத்தின் 9-ஆவது ஆதீனகர்த்தர் தவத்திரு இராமநாத ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் 2—7—1982 அன்று மதுரையில் பரிபூரணமடைந்து மீனாட்சியம்மை திருவடிப்பேறு பெற்றார்கள்.

தவத்திரு இராமநாத ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகளோடு 24 ஆண்டுகளாக நெருக்கமாகப் பழகிய பாகனேரி ராம. முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்கள் சுவாமிகளைப் பற்றி நமது பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது :—

சுவாமிகள் நாட்டரசன்கோட்டையில் பிறந்து தமது 9 ஆவது வயதில் காரைக்குடிக்கு சுவீகாரம் போனார்கள். அவர்களுக்குத் திருமணம் ஆகி ஒரு மகனும் இரண்டு பெண்மக்களும் உண்டு. அவர்களுக்கும் திருமணமாகிவிட்டது. பேரக் குழந்தைகள் இருக்கிறார்கள். குடும்ப வாழ்க்கையில் பற்றற்று சுவாமிகள் சந்நியாசம் பெற்றார்கள். அவர்கள் சந்நியாசம் பெற்று 30 ஆண்டுகள் ஆகின்றன.

சுவாமிகள் முதலில் சிக்கல் பொருள்வைத்தசேரி உகந்த லிங்க ஞானதேசிக சுவாமிகள் மடாலயத்தில் 2 ஆண்டுகளும் திருவண்ணாமலை ஈசானிய மடாலயத்தில் 18 ஆண்டுகளும் இருந்தார்கள். மடாலயத்தின் நிர்வாகம் பிடிக்காமையால் ஆறு மாதங்கள் குகையில் வசித்தார்கள். கோவிலூருக்கு அவர்கள் வந்து 11 ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் தொடர்ந்து ஆதீனகர்த்தராக இருக்க விரும்பவில்லை. தவறுகளைக் கண்டபோது அதைத் திருத்த முயற்சிப்பார்கள்; முடியவில்லை என்றால் அதிலிருந்து தாமாகவே ஒதுங்கிக்கொண்டு விடுவார்கள். திருவண்ணாமலை, கோவிலூர் மடாலயங்களில் இவர்கள் நிறையச் சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருக்களர் வீரகேசர ஞான தேசிக சுவாமிகள் மடாலயத்தில் ஆதீன கர்த்தராக இருந்த கிருஷ்ணானந்த சுவாமிகள் அந்த மடாலயம் தனக்குச் சொந்தமானது என்று வழக்குப் போட்டு அது 12 ஆண்டுகள் நடைபெற்றது. நம் தவத்திரு இராமநாத ஞானதேசிக சுவாமிகள் விட்டுக் கொடுத்து எல்லாவற்றையும் சமாதானமாக நிறைவேற்றி வைத்தார்கள். இவர்கள் ஆதீனகர்த்தராக வந்த பின்னால் திருவண்ணாமலை, கோவிலூர் மடாலயங்களில் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

❂ கடமையை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாயிருப்பவன். புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் காதில் போட்டுக்கொள்வதில்லை.

மடாலயத்தின் உரிமை ஆதீனகர்த்தருக்கு மட்டுமே இருப்பதை சுவாமிகள் விரும்பாமல் 'கோவிலூர் ஆண்டவர் மன்றம்' என்று ஒன்றைத் தோற்றுவித்து அதற்குத் தலைவர், செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் என்று ஏற்படுத்தச் செய்தார்கள்.

சுவாமிகள் தேவாரம், கீதை போன்றவற்றை விரும்பிப்படிப்பார்கள். சமஸ்கிருதத்திலும் பாண்டியத்தியம் பெற்றவர்கள். சுமார் 2 ஆண்டுகளாக உணவை வெகுவாகக் குறைத்துக் கொண்டுவிட்டதே அவர்களது உடல்நிலை மோசமடைந்ததற்குக் காரணமாகும். அவர்கள் காசியில் ஜல சமாதி ஆக வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். அதற்காகக் காசி செல்ல இரயிலுக்கு டிக்கெட்கூட எடுத்திருந்தார்கள்.

சுவாமிகள் சமாதி உள்ள இடத்தில் மண்டபம் ஒன்றை நிறுவவும் தினசரி பூஜைகள் நடத்தவும் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு நிதி திரட்ட மெய்யன்பர்கள் ஆவன செய்து வருகிறார்கள்.

— இவ்வாறு ராம. முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்கள் கூறினார்கள்.

தவத்திரு இராமநாத ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகளோடு 15 ஆண்டுகளாக நெருக்கமாகப் பழகியுள்ள தேவகோட்டை ராம. லெ. ராம. லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் சுவாமிகளைப் பற்றி நமது பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது :-

சுவாமிகள் ஒரு பட்டதாரி. அவர்கள் தொடக்க காலத்தில் இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தபோது பல தொழில்களைச் செய்திருக்கிறார்கள். மயூரா பிலிம்ஸ் சார்பில் ''கண்ணப்ப நாயனார்'' என்று ஒரு தமிழ்ப் படம் தயாரித்தார்கள். அதில் அவ்வளவாக வெற்றி காணவில்லை. பின்னால் வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களிடம் தனி உதவியாளராகப் பணியாற்றினார்கள்.

இவர்கள் கோவிலூரில் பட்டத்திற்கு வந்து 11 ஆண்டுகள் ஆகின்றன. இவர்கள் இங்கு வருவதற்கு முன்பு மடாலய நிர்வாகம் சரியாக இல்லை. அவற்றையெல்லாம் இவர்கள் சீர்படுத்தினார்கள். கோவிலூர் வாசலில் உள்ள இரண்டு 'டவர்'களையும் பழுது பார்க்கச் செய்தார்கள். கோவிலூர் மடாலயம் முழுவதையும் பெரும் பொருட் செலவில்

நூலறிவை மனப்பாடம் பண்ணியவன் அறிஞன் ஆகான். உள்ளிருக்கும் பரமனோடு இணக்கம் வைத்தவனே கற்றவன். அவன் பகருவதில் புதுமை பொலிகிறது.

புதுப்பித்தார்கள். சிதம்பரம் பொன்னம்பல சுவாமி மடாலயத்தைச் சீர்திருத்தம் செய்தார்கள். திருவண்ணுமலை ஈசானிய மடாலயத்தைப் புதுப்பித்து ஈசானியர் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

இவர்கள் ஈசானிய மடாலயத்தில் இருந்தபோது எங்கும் வறட்சி; மழையில்லாமல் மக்கள் தவித்தார்கள். பஞ்சம் ஏற்பட்டது. சுவாமிகள் மழை வேண்டி அன்ன ஆகாரமின்றி 17 நாட்கள் யோக நிஷ்டையில் இருந்தார்கள். 18ஆம் நாள் மழை கொட்டோ கொட்டென்று கொட்டியவுடன் சுவாமிகள் பழைய நிலைக்குவந்து ஆகாரம் சாப்பிட்டார்கள்.

திருவண்ணுமலை அம்பாளுக்கு சுவாமிகள் திருத்தேர் செய்து வைத்திருக்கிருர்கள்.

சுவாமிகள் திருவண்ணுமலையில் 'சேவாச்சிரமம்' என்ற கல்வி நிறுவனத்தை ஏற்படுத்தினுர்கள். அது இப்போது அரசினர் பொறுப்பில் இயங்கி வருகிறது.

சுவாமிகள் சீர்திருத்தக் கருத்துடையவர்கள். அவர்களுக்கு ஜாதி மத வேறுபாடு கிடையாது. நகரத்தார்களுக்கு சுவாமிகளிடம் அதிகமான பக்தியும் மரியாதையும் உண்டு. சுவாமிகளிடம் அளவில்லா அன்பும் மரியாதையும் கொண்ட நகரத்தார் பெருமக்கள் சுவாமிகளின் சமாதியில் ஆலயம் எழுப்பி நித்திய பூஜைகள் செய்து பராமரித்து வர ஆர்வம் கொண்டு ஆவன செய்து வருகிருர்கள்.

நான்காண்டுகளுக்கு முன், காரையார் கோவில் நிர்வாகத்தில் இருந்த அரிமளம் அரு. இராமநாத சுவாமிகள் இளவரசாக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் 10ஆவது ஆதீனகர்த்தராக இப்போது பொறுப்பேற்றுச் செயல்பட்டு வருகிருர்கள்.

— இவ்வாறு லெட்சுமணன் செட்டியார் அவர்கள் கூறினுர்கள்.

தவத்திரு இராமநாத ஞான தேசிக சுவாமிகளோடு பழகியுள்ள கண்டவராயன்பட்டி நா. அருணுசலன் செட்டியார் அவர்கள் பேட்டியின்போது சுவாமிகளைப் பற்றிக் கூறியதாவது :—

பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு 45 ஆண்டுகளுக்கு முன்பு தர்மகர்த்தாவாக இருந்து சேவை செய்தவர்களும் பிள்ளையார்பட்டிக் கோவில் காரியக்காரர் வகையைச் சார்ந்தவர்களுமான காரைக்குடி வீ. மு. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு சுவாமிகள் தத்துப் பிள்ளையானுர்கள், இளையாத்தக்குடி கோயில் பாரம்பரியக் காரியக்காரர்களான காரைக்குடி சித. நா. ராம. நாராயணன் செட்டியார் அவர்களின் புதல்வி மெய்யம்மை ஆச்சியை சுவாமிகள் திருமணம் செய்து கொண்டார்கள்.

இராமநாத சுவாமிகள் காரைக்குடியில் கண்ணுடி, படக்கடை வைத்திருந்த காலத்தில் 'தமிழ்க் கடல்' ராய. சொ. அவர்களைப் பின் பற்றி காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து தேச விடுதலைக்குப் பாடுபட்டார்கள். அக்காலத்தில் குடும்பத்திலிருந்து விலகி சாதுக்களிடம் சேர்ந்து சிவப்பணியாற்றினுர்கள். சுவாமிகள் திருவானைக்காவலில் புடவைக் கடை ஒன்றில் மானேஜராகவும் காரைக்குடி சிவநெறித் திருக்கூட்டத்தில் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிருர்கள். நகரத்தார் வசிக்கின்ற ஊர்களிலெல்லாம் திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள்.

1940ல் குடும்ப வாழ்க்கையை வெறுத்து சுவாமிகள் சிக்கல் பொருள் வைத்தசேரியில் காயாசம் பெறச் செல்கையில் சுவாமிகளது மாமனுர் திரு. நாராயணன் செட்டியார் விஷயமறிந்து கண்டவராயன் பட்டி பழ.கரு முப. நாராயணன் செட்டியார், பூலாங்குறிச்சி வ.சொ. இராமநாதன் செட்டியார் ஆகியோரை அனுப்பி சமாதானம் செய்து அழைத்துவரச் செய்தார்கள். ஆனுல் சுவாமிகள் ஒரே பிடிவாதமாக வர மறுத்துவிட்டார்கள்.

—இவ்வாறு நா. அருணுசலன் செட்டியார் அவர்கள் கூறினுர்கள்.

ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு டாக்டர் பட்டம்

செட்டி நாட்டரசர் ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி எஸ். நடராஜன் அவர்கள் ஆகிய இருவரும் இலக்கியத்தில் சிறந்தவர்கள் என்பதற்காக அமெரிக்கா நாட்டின் நியூயார்க்கில் உள்ள உலகப் பல்கலைக் கழகம் அவர்களுக்கு 'டாக்டர்' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியுள்ளது.

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி எஸ். மோகன் அவர்கள் சட்டத் துறையில் சிறந்து விளங்கியதற்காக அமெரிக்கா நாட்டின் அரிசோனாவில் உள்ள உலகப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியுள்ளது.

இம் மூவரையும் பாராட்டும் விதமாக சென்னையில் அண்மையில் மக்கள்குழு சார்பில் ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் எம். சாந்தப்பா அவர்கள் தலைமையேற்றார்கள். பட்டங்களை உலகப் பல்கலைக் கழகத்தின் சார்பில் சாந்தப்பா அவர்கள் வழங்கி பொன்னாடை அணிவித்தார்கள்.

பொதுக் குழுக் கூட்டம்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் விசேடப் பொதுக் குழுக் கூட்டம் அதன் தலைவர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் 18—7—82 அன்று காலையில் கோவிலூர் மடாலயத்தில் நிகழ்ந்தது. சுமார் 200 நகரத்தார் பெருமக்கள் கலந்து கொண்டனர். செயலர் திரு. எஸ்பி. எஸ். மெய்யப்பன் கடவுள் வாழ்த்துப் பாடினார். கோவிலூர் மடாலயத்தின் 9 ஆவது ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ இராமநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியபின் கூட்டம் தொடங்கியது. ஸ்ரீ காசி விஸ்வேஸ்வர் விசாலாட்சி அபிஷேக ஆராதனைகட்கு நித்தியப் பூஜைக் கட்டளை நிர்வாக சம்பந்தமாகப் பேசி நல்லதோர் முடிவு எடுக்கப் பெற்றது.

இளைஞர் மன்றத்தின் ஆண்டு விழா

புதுக்கோட்டை மாவட்டம் பனையப்பட்டி இளைஞர் மன்றத்தின் ஆறும் ஆண்டு நிறைவு விழா 24—6—82 அன்று சிறப்பாக நடைபெற்றது. திரு. பழ. மு. முத்தையா செட்டியார் தலைமை தாங்கிய கருத்தரங்கில், மன்றச் செயலர் திரு. சுப. அருணாசலம் வரவேற்புரை நிகழ்த்த, மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி என். சிதம்பரம் செட்டியாரும், திரு. பழ. கருப்பையாவும் சிறப்புரை நிகழ்த்தினார்கள். அதைத் தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகள் கலை நிகழ்ச்சி நடத்த, மன்றத் தலைவர் திரு. வ. முத்துக் கணேசன் நன்றியுரைக்குப்பின், மதுரை 'ரெட் ஸ்டார்' குழுவினரின் திரை இசை விருந்துடன் விழா இனிது முடிந்தது.

மதுரை நகரத்தார் சங்க ஆண்டு விழா

மதுரை நகரத்தார் சங்கத்தின் 26ஆவது ஆண்டு விழாவும் பேரவைக் கூட்டமும் 4—7—82 அன்று நகர விடுதியில் சிறப்பாக நடைபெற்றன.

இவ்விழாவிற்கு லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமை ஏற்க, மதுரை அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் குழந்தைக் கவிஞர் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' அழ. வள்ளியப்பா அவர்களும் சிறப்புரையாற்றினுர்கள்.

கூட்டத் தொடக்கத்தில், 2—7—82 அன்று பரிபூரணமெய்திய கோவிலூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞான தேசிகர் அவர்களை நினைந்து சில நிமிடங்கள் மௌன அஞ்சலி மேற்கொள்ளப்பட்டது.

வரவேற்புரை

செயலாளர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி அறிக்கை வாசித்தார்கள். மதுரை நகரத்தார் சங்கம் 1956ல் தொடங்கப்பட்டது என்றும் இன்று வரை கல்விப் பணிக்காக திரும்பப் பெறும் கடன் உதவித் தொகையாகச் சுமார் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் திரும்ப வந்துள்ளது என்றும் தெரிவித்தார்கள். மற்றும் சங்கத்தின் பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

அழகுசுந்தரம் செட்டியார்

விழாவிற்குத் தலைமையேற்ற தொழிலதிபர் லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் பேசுகையில் குழந்தைக் கவிஞர் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கிற நிலையில் குழந்தைகள் இறை வணக்கம் பாடியது சிறப்பாகுமென்றும் குழந்தைக்கவிஞருக்கு 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் வழங்கிய குழுவில், தான் இடம் பெற்றிருந்ததாகவும் குறிப்பிட்டார்கள். மேலும் மதுரை நகரத்தார் சங்கம் வளர்ச்சியடைந்த விதத்தையும் விளக்கினுர்கள்.

நீரும் நெருப்பும் நமக்கு இன்றியமையாதவை. நீர் வைணவம்; நெருப்பு சைவம். நீரின் தண்மையைக் காட்டத் திருமால் பச்சை நிறத்தோடு பாற்கடலில் பள்ளிகொண்டார். நெருப்பின் ஆக்கத்தைக் காட்டச் சிவபெருமான் சிவப்பு நிறத்தோடு அனலேந்தி ஆடினுர்.

— சொ. சொ. மீ. சுந்தரம்

(மதுரை நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

குழந்தைக்கவிஞர்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் தமது சிறப்புரையில் குழந்தைகள் இலக்கியத்திற்கு 30 ஆண்டுகளாக, தான் சேவை செய்து வருவதாகவும் குழந்தைகளுக்கான பத்திரிகைகள் வெளிவருவது இப்போது குறைவாக இருப்பதாகவும் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள்தான் முதன்முதலில் குழந்தை இலக்கியம் படைத்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்கள். பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் கற்பனை வளத்தோடு இருந்தனவென்றும் குழந்தை இலக்கியம் வளர்ந்து வருவதாகவும் அதில் செட்டிநாட்டுக்குப் பெரும் பங்குண்டு என்றும் கூறினார்கள்.

வி. என். சிதம்பரம்

வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் நம்மவர்கள் 1 இலட்சம் மக்கள் தொகை அளவில் இருந்தாலும் சிறப்பாகச் செயலாற்றி வருவதாகவும் 150 ஆண்டுகளுக்கு முன்பே வருமான வரி, வசதிவரி போன்றவற்றைக் கண்டுபிடித்தவர்கள் நகரத்தார்கள் என்றும் கூறினார்கள்.

நகரத்தார்களுக்குத் தொண்டு செய்ய எண்ணியபோது தனக்கு அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் பதவி கிடைத்ததாகவும் பெரிய அளவில், தான் தொண்டு செய்யாவிட்டாலும் இலங்கைக்குப் பாலம் அமைக்க ராமருக்கு அணில் உதவியது போல, சிறிய அளவில் தொண்டு புரிந்து வருவதாகவும் வெளிநாடுகளில் நமக்குச் சொந்தமாகக் கோடிக் கணக்கில் சொத்துக்கள் இருப்பதாகவும் அவற்றை இங்கு கொண்டுவந்து பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்தலாமெனவும் யோசனை கூறினார்கள்.

நிர்வாகிகள் தேர்தல்

27ஆம் ஆண்டுக்கு சுப. அ. நடராஜன் செட்டியார் அவர்கள் தலைவராகவும் 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும் எஸ். முத்துக்கருப்ப செட்டியார் என்ற மணிச் செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் இராம. ஏகப்பன் அவர்கள் ஆகிய இருவரும் செயலாளர்களாகவும் சுப. நாராயணன் B. Com., A. C. A. அவர்கள், பெரி. பஞ்சநதம் செட்டியார் அவர்கள் ஆகிய இருவரும் கணக்காய்வாளர்களாகவும் 51 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராம. ஏகப்பன் அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிது நிறைவேறியது.

சமுதாயத்திற்குப் பாடுபடுவதில் புகழ் வருகிறது; அந்தப் புகழ் இந்த உயிருக்கு ஊதியமாகும்.

— பழ. கருப்பையா

(மதுரை நகரத்தார் சங்க ஆண்டு விழாவில்)

கல்யாணமும் கூட்டமும்

கவிஞர் சிவல்புரி சிங்காரம்

கல்யாண வீட்டிற்கு வந்திருந்தவர்கள் முத்துப்பேட்டை சண்முக சுந்தரம் நாதஸ்வரத்தில் மூழ்கிக் கொண்டிருந்தார்கள். மாப்பிள்ளை யை அழைத்துக் கொண்டு வந்து மண மேடையில் உட்கார வைத்து விட்டு மாமக்காரர் சற்று இளைப்பாறினர்.

வளவிற்குள் காலைப் பலகாரம் நாலு பந்தி நடந்தும் ஆண்கள் கூட்டம் காத்திருந்தது. அது முடிந்து பெண்கள் பந்தி தொடங்க வேண்டும். வள்ளியப்ப செட்டியாருக்கும் அவரது மனைவி ஜானகி ஆச்சிக்கும் ஒன்றும் புரியவில்லை. மணமகளுக்குப் பெற்றோர் அவர்கள். வந்த கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் தடுமாறினர் வள்ளியப்ப செட்டியார்.

பர்மா செழித்திருந்தபோது இந்தக் கூட்டம் வந்திருந்தால் கவலைப்பட்டிருக்கமாட்டார். மூத்த பெண் திருமணத்தில் அஷ்டமத்துச் சனிக்குப் பரிகாரமாக நகரத்தார்களுக்கு மட்டுமன்றி நாட்டார்க ளுக்கும் அன்னதானம் செய்த நல்லவர் அவர். அன்று இரண்டாயிரம் பேருக்குச் சோறு போட்ட வள்ளல்; இன்று இருநூறு பேருக்குச் சோறு போட தயக்கமான நிலை. அதிக வருமானம் இல்லாத வாழ்க்கை. அவர் என்ன செய்வார்?

அச்சு இல்லாமல் தேரோட்ட முடியுமா என்று நினைத்த சமயத்தில் தான் அச்சுத் தொழிலைக் கூட்டாகச் சேர்ந்து நடத்தி ஓரளவு ஆதாயம் அடைந்தார். அந்த வருமானத்தில் நடத்தும் திருமணம் தான் இது.

'இருநூறு பேர்களுக்கு மட்டுமே அழைப்பிதழ் கொடுத்தும் கூட்டம் ஐநூறு பேர்களுக்கு மேல் எப்படி வந்தது?' என்று புரியாமல் குழம்பி னர். இது நீங்கலாக மாப்பிள்ளை வீட்டாருடைய கூட்டம் வேறு.

திடீரென்று ஜானகி ஆச்சி ஓடி வந்தார்.

''பேப்பர் இருநூறு பேருக்குத்தானே கொடுத்தீங்க'' என்று கேட்டார்.

கணவன் : மாப்பிள்ளை எப்ப வந்தாலும் நம்ம வீட்டிலே பதினாறுநாள் தங்கிடுறாரே!

மனைவி : இதுக்குத்தான் 'மார்க்கண்டேயன்'னு பெயருள்ள மாப்பிள்ளையாத் தேடாதீங்கன்னு அப்பவே நான் சொன்னேன். கேட்டீங்களா?

— சிவல்புரி சிங்காரம்

''ஆமாம்'' என்றார் செட்டியார்.

''அப்புறம் எப்படி இவ்வளவு கூட்டம் வந்தது?'' என்று கேட்டு பெருமூச்சு விட்டார் ஜானகி ஆச்சி.

அவரது மூத்த மகன் முத்துக்குமார் இதைக் கேட்டுக் கொண்டிருந் தான்.

ஓடிப்போய் கைப்பெட்டியில் உள்ள திருமண அழைப்பிதழை எடுத்து வந்து அப்பாவிடம் கொடுத்து ''இப்படியா அழைப்பிதழ் அடிப்பது?'' என்று கேட்டான்.

''நம்ம பிரஸ்ஸில் நன்றாகத்தானே அச்சடித்திருக்கிறேன்'' என்றார் வள்ளியப்ப செட்டியார்.

''மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள்'' என்றான் முத்துக் குமார். படித்துப் பார்த்து விட்டு ''ஏதும் தவறு இல்லையே'' என்றார் வள்ளியப்ப செட்டியார். ''கடைசி வரியை நன்றாகப் படித்துப் பாருங் கள் அப்பா'' என்றான் மகன். வள்ளியப்ப செட்டியார் படித்தார்....

''எங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து வாழ்த்திச் சிறப்பிக்க வேண்டுகி றேன்'' என்று இருந்தது. இப்போது கூட்டம் வந்த காரணம் வள்ளியப்ப செட்டியாருக்குப் புரிந்து விட்டது.

அடுத்த மகளுக்குத் திருமணம் செய்யும்போது திருமண அழைப் பிதழில் கீழ்க்கண்டவாறு அச்சடிக்கத் தீர்மானித்தார்:

எங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்கள் வந்திருந்து வாழ்த்திச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

நந்தியின் மகிமை

செட்டி நாட்டுச் சிவன் கோவில்களில் எண்ணற்ற நந்தி கள் உள்ளன. அதுபோல் வேந்தன்பட்டியில் உள்ள நந்தி, மிகவும் பிரசித்தி பெற்றது. மனதில் நினைத்த காரியங்கள் நிறைவேற மக்கள் இந்நந்தியை மனதில் நினைத்து வேண்டிக் கொள்வர்; காரியங்கள் கைகூடியபின் நந்திக்கு நெய் அபிஷேகம் செய்வார்கள். நந்தியின் மீது அபிஷேகம் செய்த நெய்யை வழித்து எடுப்பதில்லை. ஆனால், அந்த நந்தியின் மீது ஈக்கள் மொய்ப்பதில்லை; எறும்புகள் ஏறுவதில்லை. வேறு எந்த விதமான ஜந்துக்களும் நெருங்குவதில்லை. நெடுநாள் ஆனாலும் அது அப்படியே இருக்கும். என்னே நந்தியின் மகிமை!

கார்த்திகை மடம் சுப்பிரமணியன்,
வேந்தன்பட்டி.

பொற் கவிதை தந்தவன்

சீரார் மலையரசி சேர்ந்தசிறு கூடல்நகர்
பாரில் புகழெய்தப் பாங்குடனே — யார்யாரும்
போற்றிப் புகழ்ந்திடவே பொற்கவிதை தந்தவனே!
வேற்றுலகேன் போனாய் விரைந்து?

கண்ணதாசன்என்னும் கன்னித் தமிழ்க்குயிலே!
வண்ணப் படங்களுக்கு வான்மழைபோல் —
எண்ணமெலாம்
மன்னவனாய் நின்றவனே! வானுலகு சென்றாயே!
என்னையா செய்வோம் இனி?

— AR. V. சீனிவாசன்
தலைவர், சிக்மகளூர் தமிழ்ச் சங்கம்

ஒருவர்: உங்க குழந்தைக்கு என்ன பெயர் வச்சீங்க!

மற்றொருவர்: என்ன பெயர் வைக்கலாம்னு நானும் என் மனைவியும் யோசிச்சுத் தீர்மானம் பண்றதுக்குள்ளே அடுத்த குழந்தை பிறந்திடுச்சே!

—சிவல்புரி சிங்காரம்.

காலமானார்

நெற்குப்பை ந. பழ. மு. ராம. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்களின் மனைவியும் 'லெட்சுமி' எம். சிங்காரம் செட்டியார் அவர்களின் தாயாருமான சிவகாமி ஆச்சி அவர்கள் தமது 73-வது வயதில் காலமானார்கள் என்பதை அறிய வருந்துகிறோம். அவர்களுடைய ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

குருவிக்கொண்டான்பட்டி அ. சொ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்களின் மனைவியும் சித. வடிவேல் செட்டியார் அவர்களின் தாயாருமான அடைக்கம்மை ஆச்சி அவர்கள் 27—7—82 அன்று காலமானார்கள் என்பதை அறிய வருந்துகிறோம். அவர்களுடைய ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அப்பர் பெருமானுக்கும் மனே வாழ்வாம்

பழ. சண்முகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மேலும் ''பாலனுய்க் கழிந்த நாளும்'' எனப் பகருங்கால் இளம் பிராயத்திலேயே ஞானப்பால், அம்மையால்யூட்டப்பெற்ற ஆளுடைய பிள்ளைப் பெருமான் நினைவும், பனிமலர்க் கோதை மார்தம் மேலனுய்க் கழிந்த நாளும்'' என நினைந்த போது அடுத்த பருவமான நடுப்பருவத்து ஆளுடைய நம்பிகளாம் பெருமான் நினைவும் இவ்வாறு முதற் பருவம், நடுப்பருவம் கடந்தும் கூட, நடுப் பருவத்தினர் பெற்ற ''ஊன்றுகோல்'' நினைவும் வந்ததாகக் கொண்டு காலவரலாறு பிற்பட்டதானாலும் இறையருள் உந்த, பிற்பட்ட வரலாற்றின் குறிப்பை முன்னமேயே தொட்டதாக ஏன் கொள்ளப்படாது? அருளாளர்கள் நிலைக்கு, சான்றுக்கு, எதுவும் பொருந்துமே! இப்படிக் கொள்வது கற்பனையானாலும் கூட தவறென்ன? கற்பனை, உண்மையைச் சுட்டத்தானே கையாளப் பெறுகிறது. மகிழும் பெரும் வாய்ப்பும் ஒருங்கே தன்னகத்தே உள்ளுரப் பளிச்சிடுவதாக ஒருவாறு (பெருமானுர் உள்ளுரை யாதோ, யாம் ஏதறிவோம். அவர்கள் ஆயிரங் கோடிக் கதிரவர்கள் கூடியப் பேரொளிப் பிழம்பு. நாமோ, மண்ணெண்ணெய்ச் சிமிணி. மின்மினிப் பூச்சி எவ்வாறு உறுதிப்படுத்துவது? நயம் கண்டின்புற இப்படிச் சொல்லிப் பார்ப்போமே என்று முயலுவதே அன்றியாதுளது) மறைபொருள் இருக்கமுடியுமோ என்று இவ்வாறெல்லாம் ஆய்வு செய்தால் பயனுளதாகுமே என்ற சிந்தனையும் உருக்கொள்ளுகிறது. அருளாளர்களின் திருவாக்குகளுக்கு அவர்களே தான் உண்மைப் பொருள் காட்டியாட் கொளவேண்டும்.

எனவே அருள் வாக்குகளுக்குப் பொருள் செய்யும் பண்பு அனைத்தும் அவர்களுக்கே நடைபெற்றதாகக் கொள்ளுதல் சாலாது என்பதற்கு இவ்வாறு பேசலானேம். இன்னும் மணிமொழித் திருவுருவ வாதவூர் வள்ளலை அணுகினல் அப்பப்பா! ஒருத்தி வாய் துடித்தவாறும், துகில் இறையே சோர்ந்தவாறும் முகங்குறு வேர் பொடித்தவாறும் என்றருளவர். இரக்கமே வடிவான வடலூர் வள்ளலை அணுகினல், ''ஒரு மடந்தை வலிந்தணைந்து கலந்து அகன்ற பின்னர்'' என்றும் அருளுவர். இவைகளுக்கெல்லாம் உண்மைப் பொருள் வேறு. விரிவஞ்சி விடுத்தோம். எனினும் அப்படியே முழுக்க முழுக்க நம்மனேரை வைத்தே பாடியருளியமையே என்று இப்போது இங்கு கொள்வதைத் தவிர வேறு வகை ஒன்றுமே நாடமுடியாது. நம்மனேர் கூற்றையே தம்மேலேற்றி பாடியமை இராமலிங்கப் பெருமானிடம் மிகையாகக் காணலாம். வாழையடி வாழையாய் வந்த மரபினர் அல்லவா? முன்போந்த அருளாளர்கள் நிலைகள் அத்தனையும் தாமாகி ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிப் பேசிப் பாடி எழுதியும் முறையிட்டருள்வர்.

இத்தகைய விளக்கம் ஒரு புறமிருக்க, கட்டுரையாசிரியர் ஈற்றில் சாற்றும் கூற்று சிந்தனையைக் கிளரி அமைதிகாண முடியாமல் இதயம் படபடக்க வைக்கின்றது.

'' இக்குறிப்புகளால் அறியப்பெறும் மனைவாழ்க்கை பற்றிச் சேக்கிழார் விளக்கமாகக் கூருமற் போயின காரணம் அவர்க்குப் போதிய விளக்கக் குறிப்புகள் கிடையாமற்போயினமையே என்றும் கருதலாம். சேக்கிழார் பல விபரங்களை விளக்கமாக எடுத்துரைத்தும் சிலவற்றை மிக நுட்பமாகக் குறித்துணரும்படி உரைத்தருளும் இயல்பினர் என்பதற்குப் பெரிய புராணத்தினின்றும் பல சான்றுகள் காட்டலாம்''.

மேற்கண்ட இவ்வாசகத்துடன் கட்டுரை (மனை வாழ்வுப் பகுதி) நிறைவெய்துகிறது செல்வியில். இக்கூற்றைப் பற்றிச் சில சிந்திக்க முயலுவோமாக. சேக்கிழார் பெருமான் நமக்கு காலத்தால் முந்தியவர்கள். அப்பர் பெருமான் காலத்துக்கு நெருங்கியவர். நாம் சேக்கிழார் பெருமான் காலத்துக்கும் நிரம்பப் பிந்தியவர்கள். அப்பர் பெருமான் காலத்துக்கு வெகு தூரத்திலிருப்பவர்கள். யாருக்கு உண்மை புரிய வாய்ப்பு? வானிழல் கூறிய மெய்மொழிக் கூற்று! திருத்தொண்டர் புராண ஆசிரியப் பெருந்தகையின் மலர்வாய் திறத்தல்! நம்மனோர் கூற்று...? ஆசிரியப் பெருந்தகையின் நிலை அருளார்ந்த அமைச்சர் நிலை. எதில் என்ன குறைவு? போதிய விளக்கக் குறிப்புகள் கிடையாமற் போயினமைக்கு! 1596 வரிகள் கொண்ட அளப்பரும் திருஅகவல் அகவியருளிய இராமலிங்க அடிகள் ''உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்'' என்ற வானிழல் கூறியருளிய மெய் மொழிப் பொருளுக்கு, திருவருள் மெய்மொழிப் பொருள் விளக்கம் என்றே பக்கம் பக்கமாக எழுதி ஈற்றில், விரித்தால் இன்னும் பெருகும் என முடித்தருள்வர். ஆண்டவனிடமே அடிகள் பல விளக்கம் கேட்டு, செப்பி யருளப்பெற்றதாக, உணர்த்தி அருளப் பெற்றதாக காட்டி அருளப் பெற்றதாக திருஅருட்பா முரசறைந்து நின்று வளருகிறது. பெரிய புராண ஆசிரியப் பெருந்தகை; திருநாவுக்கரசர் புராணம் பராவும்போது அரசரின் இளமைப்போது, மயிர்நீக்கும்வினை (சவுளம், சௌளனம்) பேசியருள்வர். கல்வி பயிற்றும் வினை கழறி அருள்வர். இந்நிலையில் திருமணத்தைப் பேசவில்லை எனின், (ஒரு அருளாள அமைச்சர், வரலாறு கூறியருளிய நிலையில்) நாம்தான் ஏன் அதில் தலையிடுவது ? நாயன்மார்கள் புராணங்களில் மனைவியர்களோடும்-மக்களோடும் வாழ்ந்தும் தனியே வாழ்ந்தும் இறையடி அடைந்த நிலைப் பலப்பல வகையில் பாடி அருளப்பெற்றுள்ளது. எனவே இல்லறத்தைப் பற்றியும் துறவறத்தைப் பற்றியும் ஒரு பேதமில்லை.

பாதரசம் பூசிய கண்ணாடியில்தான் உன் முகத்தைப் பார்க்க முடியும். அதுபோல அன்பு பூசிய அகத்தில்தான் ஆண்டவனைத் தரிசிக்க முடியும்.

— இராமகிருஷ்ணர்

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர் சங்கரன்தான் மறவாமை'' ஒன்றே குறிக்கோள் என்பது திருத்தொண்டர் புராணங்களின் குறிக்கோள்.. அப்பர் பெருமானுக்கு இல்லறமிருந்து அது மெய்ப்பிக்கப்பெற்றால் அதனால் எவ்விதக் குறையுமே இல்லை. இல்லாத ஒன்றை, சான்றுகள் காணமுடியாத ஒன்றை முயலுவதின் நோக்கமாவது கட்டுரையில் விளக்கப் பெற்றிருந்தால், அது குறித்தாவது அமைதியுற வழியுண்டு. சேக்கிழார் பெருமான் திருவாக்கால், நில்லாத உலகியல்பு கண்டு நிலையா வாழ்க்கை அல்லேன் என்று ''அறத்துறந்து'' (திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் 37) எனத் திட்டவட்டமாகப் பாடப்பெற்றுள்ளதே. ''அறத் துறந்து'' என்பதற்கு எவ்வகைப் பொருள் கொள்வது? சிவஞ்ஞான மாமுனிவருளிய ''இடையறாப் பேரன்பும்'' என்ற ஆளுடைய அரசின் வாழ்வோவியச் சிவப்பொலிவுத் திருப்பாடலில் நடுநாயக மணியாக ஒளி வீசும் ''நடையறாப் பெருந்துறவும்'' என்ற அருளார்ந்து செம்மாந்து நிற்கும் கூற்றுக்கு வெற்றடியோரங்களிற் சிறு தூசான நாம் யாது கூறவல்லோம். இடையறா, படையறா, நடையறா, தொடையறா சொல்லச் சொல்ல நாவினிக்கின்றதே, வாய் மணக்கின்றதே, நெஞ்சம் குளிருகிறதே. ''கூற என் உள்ளம் குளிருமே'' என்ற திருக்கடைக் காப்புக் காட்சிப்படுகிறதே!

இவ்வாறு நம் கருத்துக்களையும், செந்தமிழ்ச் செல்விக்கு எழுதி, வெளியிடுமாறு வேண்டிக்கொண்டோம். திருவருள் கூட்டவில்லை. கொடுத்து வைத்தது அவ்வளவே என்று விட்டுவிட்டு அமைதியானோம். எனினும் திருவாமூரில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள 'அப்பரடிகள்' திருமுன் நடைபெறும் சதயத் திருநாள் விழாவில் இக்கருத்துக்களைப் பேசி ஒரு முடிவு காணபது நன்மையருளுமென அப்பரடிப்பொடியார்கள் கண்ட கம்பனடிப்பொடியார் (தியாகச் செம்மல் சீலத்திரு சா. கணேசனார்) தலைமையில் 7—5—1980ல் 3வது சொற்பொழிவாகப் பேசியபோது தலைவர் முடிவுரை கூறியதில் ''எவ்வாற்றால் பார்த்தாலும் அப்பர் பெருமான் நைட்டிக பிரம்மச் சாரியே'' என்று பற்பல துறையில் உறுதியாகத் தாம் நம்புவதாக பலவோர் முன்னிலையில் பல விளக்கங்களுடன் முடித்தார்கள்.

யார் யார் வாய் கேட்பினும் மெய்ப்பொருள் தெரிவது அறிவின் கூற்று என்றாற்போல் எதுவும் வெளிவர உரிமையுண்டு. முடிந்த வரை உண்மை தெளியவும் இறையருள் இரு சாராருக்கும் நல்கியருளும். ஈடு இணையிலாத் திருவாசகம் திருவாய் மலர்ந்த திருவாதவூர் வள்ளலாம் மணிவாசகப் பெருந்தகைக்கும்-இவ்வாறு ஒரு கூற்று-பாவம்.

கண்ணீரில் மட்டும் உப்பு இல்லாமல் இருந்திருக்குமேயானால் என்றைக்கோ தமிழகத்தின் தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்திருக்கும். — சிவல்புரி சிங்காரம்

(கவிஞர் கண்ணதாசன் சொற்பொழிவிலிருந்து)

சிவசிவ காத்தருள்புரிக. முந்நாளில் இந்நாளில் இப்படி யொருகூற்று. சிவமே, எமையாண்டருள் புரிக! நீ கைவிடின் யாம் யாதாவோம்! உன்னடி பணிகின்றேம் !

மன்ன ! எம்பிரான் ! வருக என் எனை
மாலும்நான் முகத்தொருவர் யானினும்
முன்ன ! எம்பிரான் ! வருக என் எனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாள்
பின்ன ! எம்பிரான் ! வருக என் எனைப்
பெய்கழற்கட் கன்பாய்ப்
பன்ன ! எம்பிரான் ! வருக என் எனைப்
பாவநாச ! நின் சீர்கள் பாடவே — திருவாசகம்.

சிவம்பெருக்கும் திரு ஆமூர் தோன்றினன் காண்
சிவாயவெனும் உள்ளீட்டைத் தெரிவித் தான்காண்
அவம்பெருக்கும் ''ய'' கரத்தைத் தணிக்கை செய்து
அப்பனாக நமக்குவழி அண்ணித் தான்காண்
தவம்பெருக்கும் துறவறத்தில் தானே தான்காண்
தந்நிகரில் தாண்டகத்தின் தலைவன் தான்காண்
நலம்பெருக்கும் ஞானமோனச் சிங்கம் தான்காண்
நல்லதிருச் 'சதயத்தான்' நயந்தான் தானே !

— அப்பரடிப்பொடி

(முற்றுப் பெற்றது)



நகரத்தார் ஐக்கிய சங்கம்

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 23—6—82 மாலை சென்னை தென்னிந்திய வர்த்தக சபைக் கட்டிடத்தில் அதன் தலைவர் டாக்டர் ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் கல்வி உதவிக்கு ரூ. 5 ஆயிரம் நன்கொடை வழங்கினார்கள். துன்மதி ஆண்டு ஐந்தொகையும் வரவு செலவுக் கணக்கும் அங்கீகரிக்கப் பெற்றன. நடப்பு ஆண்டுக்கு நம் சமூக மாணவ, மாணவியருக்கு ரூ. 30 ஆயிரம் திரும்பப் பெறும் வகையில் கடன் உதவி அளிப்பது என முடிவு செய்யப்பெற்றது பேரவை, பிரதி நிதித்துவ அவைக் கூட்டத்தை 1—8—1982 ஞாயிறு காலை 11–30 மணிக்கு சென்னை தென்னிந்திய வர்த்தக சபைக் கட்டிடத்தில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப் பெற்றது. செயலாளர் குமர. முருகப்பன் அவர்கள் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

வட ஆற்காடு மாவட்ட நகரத்தார் சங்கம்

வட ஆற்காடு மாவட்ட நகரத்தார் சங்கம் 27—6—82 அன்று வேலூரில் தொடங்கப்பட்டுள்ளது. *PR.* மெய்யப்ப செட்டியார் அவர்கள் (நற்சாந்துபட்டி) தலைவராகவும் மு. ராம. சே. இராமசாமிச் செட்டியார் அவர்கள் (கொப்பனாபட்டி) துணைத் தலைவராகவும் *N. K.* வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் (தேவகோட்டை) செயலாளராகவும் திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் (கொப்பனாபட்டி) இணைச் செயலாளராகவும் *M* சொக்கலிங்கம் அவர்கள் (பனையப்பட்டி) பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இச்சங்கத்தின் அலுவலகம் 29, கிழக்கு 7ஆவது மெயின்ரோடு, காந்தி நகர், வேலூர் 632006 என்ற முகவரியில் இயங்கி வருகிறது.

இச் சங்கத்தின் முதற்பணியாக வேலூர் கோட்டை ஸ்ரீ அகிலாண்டேசுவரி சமேத ஸ்ரீ ஜலகண்டேசுவரர் கோவில் கும்பாபிஷேகத்திற்கு ரூபாய் 10001 (பத்தாயிரத்து ஒன்று) நன்கொடையாக அளித்திருக்கிறார்கள். கும்பாபிஷேகத்தன்று மாலை திருக் கல்யாண உற்சவத்தை விமரிசையாக நடத்தியிருக்கிறார்கள்.

சங்கத்தினரின் ஆதரவைக் கௌரவிக்கும் வகையில் கோவில் நிர்வாகத்தார் பிரமோத்சவ உற்சவத்தின் ஒரு நாளைய உபயத்தை நகரத்தார் பெருமக்களுக்குத் தரச் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள்.

சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தின் வேண்டுகோள்

சேலத்தில் வாழ்கின்ற இளைஞர்களால் 'சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம்' அமைக்கப்பட்டு சமூக முன்னேற்றத்துக்கு உதவி வருகின்றது. அச் சங்கம் தமிழ்நாடு 'சொஸைட்டீஸ் ஆக்ட்' பிரகாரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சங்கத்திற்கு வாங்கும் நன்கொடைகட்கு இன்கம் டாக்ஸ் ஆக்ட் 80G பிரகாரம் மத்திய அரசிடம் வரி விலக்குப் பெற்றுள்ளது. சங்க நிதிக்காக நன்கொடைகள் வசூலித்து, கல்வி, திருமணங்கட்கு உதவி வருவதுடன், சங்கத்திற்காக கட்டடம் கட்ட ஏற்பாடுகள் செய்து வருகின்றது. நகரத்தார் சமூகத்திலுள்ள ஏழை எளிய பெண்களுக்காக ''குடிசைத் தொழில் மையம்'' ஏற்படுத்தவும் முயற்சிகள் செய்து வருகின்றது.

மேற்படி சங்கம் போல் நகரத்தார் இளைஞர்கள் வாழ்கின்ற ஊர்களில் சங்கங்கள் அமைக்க நம் இளைஞர்கள் முன்வர வேண்டுமென்றும் 18 வயது முதல் 45 வயது வரை உள்ளவர்கள் அதில் அங்கத்தினர்களாக இருக்கலாம் என்றும் அச்சங்கத்தின் தலைவர் திரு. ஆர் எம். நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1. இளைஞர்கள், பெண்கட்கு கல்வி, வேலைவாய்ப்புப் பெறுவதற்கும், திருமணங்கள் நடைபெறுவதற்கும் பாடுபடுதல்.
2. எளியவர்கட்கு மருத்துவ வசதி செய்து கொடுத்தல்.
3. ஆதரவற்ற பெண்கட்கு சிறு தொழில்கள் செய்ய, குடிசைத் தொழில்கள் நடத்த ஏற்பாடு செய்தல்.
4. இளைஞர்கள், பெண்கட்கு வேண்டிய புள்ளி விபரங்கள் மற்றும் அவர்கள் வளர்ச்சிக்கு வேண்டியவற்றை ஏற்படுத்துதல்.
5. அனைத்து ஊர்களிலும் ஏற்கனவே இருக்கும் இளைஞர் சங்கங்களை ஒன்றுபடுத்தியும், இனி ஏற்படும் சங்கங்களை இணைத்தும் 'ஐக்கிய சங்கம்' அமைத்து ஆண்டுக்கு ஒருமுறை ஐக்கிய கூட்டம் நடத்துதல்.
6. ஒவ்வொரு ஊரிலும் ஏற்படும் சங்கங்களின் அங்கத்தினர்கள் மாதம் ஒருமுறை கூட ஏற்பாடுகள் செய்தல்.

மேற்கண்ட காரணங்களுக்காக ஒவ்வொரு ஊரிலும் சங்கம் அமைக்கவும், வேண்டிய சாதனங்கள், சட்ட திட்டங்கள் கொடுத்து உதவவும் சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம் தயாராகவுள்ளது எனவும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

''பசு ஏன் 'அம்மா'னு கத்துது?''

''அதாலே 'அப்பா'னு கத்த முடியாதே அதனால்தான்!''

—சிவல்புரி சிங்காரம்.



உங்கள் குரல்...

ஜூன் இதழ் தலையங்கத்தில் 'நம்மவர்க்கே உதவுங்கள்' என்றில்லாமல் 'நம்மவர்க்கும் உதவுங்கள்' என வேண்டுகோள் விடுத்துள்ள பரந்த மனப்பாங்கு நம்மால் உணரப்படவும் பிறருக்கு உணர்த்தப்படவும் வேண்டியதொன்றாகும்.

இன நலம் பேணும் நல்லுணர்ச்சியை நம்மவர்களிடையே எழுப்பும் நன்முயற்சியில் "நகரத்தார் குரல்" முழு மூச்சுடன் ஈடுபடவேண்டும்.

கவிஞர் மேலைத் தமிழ்க்குமரன், மேலைச்சிவபுரி.

'அப்பர் பெருமானுக்கும் மணவாழ்வாம்' என்ற தலைப்பில் பழ. சண்முகம் அவர்கள் எழுதி வருவது மிகவும் அருமையாகவும் விளக்கமாகவும் உள்ளது. இதுபோன்ற பல நல்ல கட்டுரைகளை எதிர்பார்க்கின்றேன்.

AR. கிருஷ்ணன், சிதம்பரம்.

'உங்களுக்குத் தெரியுமா?' மிகவும் பயனுள்ள தகவல். இது போல் இன்னும் பல வெளிவரச் செய்யுங்கள்.

கே. முத்தையா, சென்னை.

நகரத்தார் சமூகத்திடையே உள்ள அதிகமான வரதட்சணைத் தீமை, துக்க வீட்டில் இனிப்புப் பலகாரம் சாப்பிடும் கொடுமை நகரத்தார் இளைஞர்களுக்கு கல்லூரிகளில் சேர இட ஒதுக்கீடு செய்ய முயற்சித்தல், பல்வேறு சமூக அறியாமையின் விளக்கம் போன்றவை பற்றி தங்கள் இதழ்களில் வெளியிடலாம்.

இராம. முத்துக்கருப்பன், வேந்தன்பட்டி,

நம் "நகரத்தார் குர"லில் திறமைமிக்கவர்களையும் இளைஞர் களையும் அறிமுகம் செய்ய வேண்டும். அதிகமான புகைப்படங்கள் வெளியிடுவதைத் தவிர்த்து சிறு கதைகள், துணுக்குகள், சமயச் சிறப்புத் தகவல்களை வெளியிட அன்புடன் வேண்டுகிறேன்.

தி. நேசன், முகவை.



திருமணம்

பாகனேரி தெ. நா. சொ. நாச்சியப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி நாச்சம்மை என்ற கலாவுக்கும் கீழப்பூங்குடி கூ. க. வயி. சொ. கண்ணப்ப செட்டியார் அவர்களது புதல்வன் செல்வன் வயிரவன் என்ற பாலசுப்பிரமணியத்திற்கும் பாகனேரியில் 11—7—82 அன்று திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

✤✤

குளிபிரை 'ஹானஸ்ட்' சொக்கலிங்கம் செட்டியார் அவர்களது புதல்வி செல்வி மல்லிகா என்ற அடைக்கம்மைக்கும் கீழச்சிவல்பட்டி லெ.நா. நாகப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் ராஜேந்திரனுக்கும் 1—7—82 அன்று குளிபிரையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

✤✤

குருவிக்கொண்டான்பட்டி பழ. கி. கி. முத்தையா செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் மு. அழகப்பன் B.Sc.க்கும் நற்சாந்து பட்டி ராம. லெ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி அமுதா என்ற மீனாட்சிக்கும் 30—6—82 அன்று நற்சாந்து பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ம ணி வி ழா

கண்டரமாணிக்கம் டத்தோ ஆறு. அ. நாச்சியப்ப செட்டியார் அவர்களுக்கும் அவர்களது துணைவியார் பார்வதிஆச்சி அவர்களுக்கும் 13—7—82 அன்று கண்டரமாணிக்கத்தில் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா சிறப்பாக நடைபெற்றது.

மணி விழாவை யொட்டி இசையும் கதையும், பட்டி மண்டபம், திரைப்பட இன்னிசை, நடனம், கரக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர்நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.

S. N. S.
PHARMACEUTICAL DISTRIBUTORS

13, NORTH VELI STREET,
MADURAI - 625001
Phone : 26474

Dear Sirs,

We are very glad to inform you that M/s. FULFORD (INDIA) PVT. LTD., BOMBAY affiliated with SCHERING CORPORATION U. S. A., has appointed us as their Distributor at Madurai.

We express our sincere thanks to you for your valuable Patronage and Co-operation.

DISTRIBUTORS / STOCKIST / PREFERED / DEALERS FOR

E. Merck India Pvt. Ltd., Bombay
Allenburys (Glaxo) Bombay
Standard Pharmaceuticals Ltd, Calcutta.
S. G. Chemicals & Pharmaceuticals Ltd.
(Suhrid Geigy Ltd,) Bombay
Spencer & Co Ltd,, Madras
The Fair Deal Corporation Pvt. Ltd. Bombay
Tamilnadu Dadha Pharmaceuticals Ltd., Madras
Astoria Pharmaceuticals, Madras
Citadel Fine Laboratories, Madras
P. S. K. Pharmaceuticals, Salem
The Anglo-French Drug Co, Bombay
Fourts India Laboratories Pvt. Ltd., Madras
Nicholas Laboratories India Ltd.
(Indian Schering Ltd. Bombay)
Uniloids Ltd., Hyderabad
Neroy Pharma Private Limited, Bombay
Lupin Laboratories Pvt. Ltd., Bombay
Concept Pharmaceuticals Pvt. Ltd., Bombay
Bios, Bombay
Mit Laboratories, Bangalore
Pharmed Pvt. Ltd. Bombay

F. O. R. Limit Rs. 1000/

Regd. No. TN/MA(C) 106 Nagarathar Kural



வி. என். சிதம்பரம் எழுதிய

"ஐயப்பன் தத்துவங்கள்"

"புண்ணிய பூமியில்

புனித யாத்திரை"